**செய்தி வெளியீடு எண் :1467** **நாள்:31.12.2021**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில் பாலாஜி அவர்கள் 30.12.2021 அன்று இரவு மின்னகத்தில் ஆய்வு மேற்கொண்டார்**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில் பாலாஜி அவர்கள் 30.12.2021 அன்று இரவு 11.00 மனியளவில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் உள்ள 24 மணிநேர மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மின்னகத்தில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் சென்னை மின் நுகர்வோர் கட்டுப்பாட்டு மையத்தையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது இயக்குநர் / பகிர்மானம் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

ஆய்விற்கு பின் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செய்தியாளர்களுடன் பேசுகையில் சென்னையில் இன்று மிக அதிக அளவில் பெய்த மழை காரணமாக பல்வேறு இடங்களில் மழை நீர் சூழ்ந்த நிலையில் மொத்தம் 32 பீடர்கள் மின்விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மின்சாரத்துறை, மாநகராட்சி நிர்வாகம் இரண்டும் இணைந்து போர்க்கால அடிப்படையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதில் 23 பீடர்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு மீண்டும் மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. மீதம் இருக்க கூடிய 9 பீடர்களில் மின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. அந்த பகுதியில் சூழ்ந்துள்ள மழை நீரை உடனடியாக அகற்றுவதற்கான பணிகள் நடைப்பெற்று வருகின்றன. மொத்தம் மின் இணைப்புதாரர்கள் 4200 பேர்களுக்கு மின்விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது சென்னை மாநகராட்சி நிர்வாகம் தேங்கியுள்ள மழை நீரை அகற்றுவதற்குண்டான பணிகளை விரைந்து செயல்படுத்தி கொண்டியிருகின்றனர்.

மின்னகத்தை பொருத்தவரை மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டு இதுவரை 5,77,000 புகார்கள் மின்னக்கத்திற்கு வரப்பெற்று இருக்கிறது. அதில் 98% விழுக்காடு அளவிற்கு வரபெற்ற புகார்களுக்கு தீர்வு காணப்பட்டது. மின் விநியோகம் சம்பந்தமாக நேற்று 814 புகார்களும் இன்று 1283 புகார்களும் வரப்பெற்றுள்ளன. அந்த புகார்கள் குறித்து விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன, இன்று மழை நீரால் பாதிக்கப்பட்டு மின் விநியோகம் நிறுத்தப்பட்ட பகுதிகளில் விரைந்து நடவடிக்கைகள் எடுத்து சீரான மின்விநியோகம் வழங்குவதற்கு மின்வாரியத்தின் சார்பாக இன்று சென்னை மாநகராட்சி பகுதிகளில் 1000 களப்பணியாளர்கள் களப்பணியில் இருக்கிறார்கள். ஏதேனும் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக வாரியம் நடவடிக்கை எடுத்து முடிப்பதற்கான பணிகளை செய்திடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அந்த உத்தரவின் அடிப்படையில் மின்வாரியம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

**கேள்வி : புளியந்தோப்பில் மின் விபத்தில் இறந்ததாக புகார் வந்துள்ளது.**

பதில் : சென்னை மாநகராட்சி பகுதிகளில் இன்றைக்கு 3 பேர்களுக்கு மின் விபத்தால் உயிர் இழப்பு ஏற்பட்டுள்ளது இது பற்றி இப்பொழுத விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. எதனால் இந்த மின்விபத்து ஏற்பட்டது என்று ஆய்வுக்குப்பின்தான் தெரிய வரும். அதன் அடிப்படையில்தான் 84 மின்மாற்றிகளின் மின்விநியேகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் 4200 மின்நுகர்வோர்களுக்கு மின்விநியோகம் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த முறை வடகிழக்கு பருவமழையால் மழை நீர் சூழ்ந்த பகுதிகளில் 1 மீட்டர் அளவிற்கு பில்லர் பாக்ஸ்களை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள், கடந்த 23ம் தேதி முதல் பில்லர் பாக்ஸ் ஒரு மீட்டர் உயரத்திற்கு உயர்த்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பணிகள் ஆரம்பித்து படிப்படியாக நிறைவேற்றகூடிய வகையில் அந்த பணிகளை தொடங்கி இருக்கின்றோம்.

மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் விரைந்து சீரான மின் விநியோகம் வழங்கப்பட வேண்டும் மற்றும் எந்தெந்த பகுதிகளில் மழைநீர் தேங்கி இருக்கின்றதோ அங்கே எல்லாம் விரைந்து சென்று விரைவாக அந்த மழைநீரை அகற்றக்கூடிய பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என உத்தரவு வழங்கியுள்ளார்கள். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கேள்வி : தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் கனமழை இருந்தால் அதற்கான முன்னெச்சரிக்கை என்ன எடுத்துள்ளீர்கள்**?

பதில் : ஏற்கெனவே வடகிழக்கு பருவமழை ஆரம்பிக்கும் போது தான் பில்லர் பாக்ஸ்கள் 1 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தும்பணிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கினார்கள். அடுத்த மழைக்காலம் வருவதற்குள்ளாக, சென்னை மாநகராட்சி முழுவதுமாக அணைத்து பில்லர் பாக்ஸ்களும் ஒரு மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டு மாற்றி அமைக்கப்படும். அதனால் மழைநீர் சூழ்ந்தாலும் கூட சீரான மின் விநியோகம் வழங்கக்கூடிய அளவில் மின்சாரத்துறை அதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி எடுத்து வருகிறது என்று தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**